# மெட்ரோவில் கார், ஷேர் ஆட்டோ சேவையைப் பயன்படுத்திய 3 லட்சம் பேர்!

சென்னை, மே 9: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார் சேவையை கடந்த 8 மாதத்தில் 3 லட்சத்து 3 ஆயிரத்து 795 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்த ஷேர் டிரிப் முறை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுத்தாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ இணைப்பு சேவை ரூ.5 கட்டணத்துடன் வழங்கப்படுகிறது. எழும்பூர், ஏஜி-டிஎம்எஸ், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவை ரூ.10 கட்டணத்துடன் வழங்கப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கிமீ சுற்றளவில் உள்ள இடங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள், கார்கள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ மற்றும் கார் சேவையை கடந்த 8 மாதத்தில் 3 லட்சத்து 3 ஆயிரத்து 795 பேர் பயன்படுத்தியுள்ளனர். நிகழாண்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் மொத்தம் 87,229 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். மார்ச் மாதத்தில் கார் சேவையை 6,574 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 35,715 பேரும் என்று மொத்தம் 42,289 பேரும் பயன்படுத்தினர். இதேபோல, ஏப்ரல் மாதத்தில் கார் சேவையை 6,260 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 38,680 பேரும் என்று மொத்தம் 44,940 பேரும் பயன்படுத்தினர். இதன் மூலம், மார்ச், ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 87,229 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி கூறியது: மெட்ரோ ரயில்நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயன்படுத்துவோர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் நிகழாண்டில் ஏப்ரல் 30-ஆம் தேதி வரை மொத்தம் 3 லட்சத்து 3 ஆயிரத்து 795 பேர் பயன்படுத்தியுள்ளனர் என்றார் அவர்.